**மதுரை (மா) +2 வணிகவியல் முதல் பருவத் தேர்வு ஆக-18**

**சரியான விடை**

1. (இ) வணிகம்
2. (அ) துறைப்படுத்துதல்
3. (இ) கூட்டுப் பங்கு நிறுமம்
4. (ஈ) மேற் சொன்ன அனைத்தும்
5. (அ) விரைவாக
6. (இ) ஒரு நபர் மட்டும் தேவை
7. (இ) 1932 சட்டம்
8. (அ) ஒப்பந்தத்தால்
9. (ஆ) உழையா கூட்டாளி
10. (அ) நிறுவனக் கலைப்பு

**ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி 4X2=8**

**11. அமைப்பு இலக்கணம்:** பொதுவான நோக்கம் அல்லது நோக்கங்களை வெற்றியடையச் செய்வதற்காக இணக்கமான சிறப்பு வாய்ந்த பகுதியினை சரிக்கட்ட கூடியதொன்றாகும். - **லூயிஸ் எச். ஹேனே**

**12. வாரிய அமைப்பு:** மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவிடம் உள்ளது. தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. TWAD, TNEB, TNHB

**13. வரையறாப் பொறுப்பு:** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறாப் பொறுப்பு. வியாபார கடன்களை அடைக்க போதுமான சொத்துக்கள் தொழிலில் இல்லையெனில் **தனது சொந்த சொத்தை இழக்க நேரிடும்.** கடனீந்தோருக்கு உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு

**14.கூட்டாண்மை:** 1932 ஆண்டு இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் 4வது பிரிவின்படி எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்துகொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு.

**15.கூட்டாளிகளிடையே நிலவும் உறவு முறை:** முதல்வர் மற்றும் முகவர் உறவு. ஒவ்வொரு கூட்டாளியும் உரிமையாளராகவும் முகவர்களாகவும் செயல்படுகின்றனர்.

**ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி : 4X3=12**

**16.இந்துகூட்டுக்குடும்பம்:** இந்து கூட்டுக்குடும்ப வணிக அமைப்பில் இந்தியா தலைசிறந்து விளங்குகிறது. இதில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள்ஆகியோர் அடங்குவர்.அவர்களது சொத்துக்கள் அனைத்தும் கூட்டுச் சொத்தாகும்.இக் குடும்ப வணிகம் குடும்ப தலைவர் மூலம் நடைபெறுகிறது, அவர் கர்த்தா என அழைக்கப்படுகிறார். இந்து கூட்டுக் குடும்பத்தில் பெண்களுக்கு சேர்ந்து வாழவும், திருமணம்செய்துகொள்ளவும்1956சட்டம் உரிமை வழங்கியிருக்கிறது.. இந்து கூட்டுக்குடும்பங்கள் பெரும்பாலும் விவசாயம், கைத்தொழில்கள், சிறுதொழில்கள் போன்ற தொழில்களைச் சார்ந்திருக்கும். 1985ஆண்டு சட்டத்தின்படி ஆண்களை போலவே பெண்களுக்கும் சமஉரிமை உண்டு. அஸ்ஸாம், மேற்கு வங்காளத்தில் தாயபாகா சட்டமும், இதர பகுதிகளில் மிட்டக்சரா சட்டமும் இந்து கூட்டுக் குடும்பம் பின்பற்றுகிறது

**17. எந்த காரணங்களுக்காக அமைப்பை படிப்பது முக்கியத்துவம்:** (அ) ஓர் அமைப்பு என்பது மனித வாழ்வில் அனைத்து முக்கிய தருணங்களிலும் பரவியுள்ளது. ஒரு மனிதனின் பிறப்பு மருத்துவமனை என்னும் அமைப்பில் நிகழ்கிறது. அவனுடைய கல்வி, பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் என்னும் அமைப்புகள் மூலம் கிடைக்கிறது. அவனது பணி அலுவலகம் தொழிற்கூடம் மற்றும் வியாபாரம் என்னும் அமைப்புகள் மூலம் நடைபெறுகிறது. (ஆ) ஒரு மேலாளருக்கு அமைப்பை பற்றிய அறிவு, பணியைத் திறம்பட செயல்படுத்த உதவுகிறது. (இ) ஒரு அமைப்பு என்பது திருப்தியளிக்கும் வகையில் இருக்க வேண்டும். மேலும் சில நேரங்களில் இது சரியாக அமையவில்லையெனில் அது ஏமாற்றத்தை அளிக்கக்கூடும்.

**18.தனியாள் வணிகத்திற்கு ஏற்ற தொழில்கள்:**
**I. குறைந்த மூலதனம் தேவைப்படும் தொழில்கள்.** 1. இனிப்புக் கடை 2. அடுமனைகள் 3. பெட்டிக்கடை **II. விரைந்து முடிவெடுத்தல் முக்கியம்:** 1. பங்குதாரர்கள் 2. மருத்துவர்கள் **III. குறைந்த இடர்பாடுள்ள தொழில்கள்:** 1. ஊர்தி பழுதுபார்க்கும் தொழில் 2. சில்லறை விற்பனை நிலையங்கள் **IV. வாடிக்கையாளர் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப தனிகவனம் செலுத்த வேண்டிய தொழில்கள். 1.**அழகு நிலையங்கள் **2.** தையலகம் **V. உள்ளூர் தேவை பருவகால தேவை மற்றும் தற்கால தேவையுடைய தொழில்கள்: 1.** சிறு வியாபாரம் **2.** சலவை நிலையம் 3. பழ வியாபாரிகள்

**19. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம் (ஏதேனும் 3)**
1. நிறுவனத்தின் பெயர் 2. ஒப்பந்த நாள் மற்றும் தொழில் புரியும் இடம் 3. அனைத்து கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி 4. நிறுவனம் மேற்கொள்ள இருக்கும் தொழிலின் தன்மை 5. கூட்டாண்மையின் கால வரையறை 6. ஒவ்வொரு கூட்டாளியும் வழங்கிய முதல் தொகை 7. ஒவ்வொரு கூட்டாளியும் நிறுவனத்திலிருந்து எடுக்கும் தொகை 8. இலாப பகிர்வு விகிதம் 9. உழைக்கும் கூட்டாளிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியம் 10. முதல் மற்றும் எடுப்பு மீது வட்டி 11. கூட்டாளிகள் சேரும்போது அல்லது விலகும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறை 12. நிறுவனத்தைக் கலைக்கும் முறையும், அக்கலைப்பின்போது கணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் வழிமுறையும் 13. கணக்கு ஏடுகளை பராமரித்தல் மற்றும் தணிக்கை 14. கூட்டாளிகள் நிறுவனத்திற்குத் தந்திடும் கடன்கள் மற்றும் முன்பணம் ஆகியவற்றின் மீதான வட்டி. 15. கூட்டாளிகள் சேரும்பொழுது, விலகும்பொழுது அல்லது இறக்கும் பொழுது வாணிக நற்பெயரை மதிப்பிடும் முறை. 16. கூட்டாளிகளிடையே உண்டாகும் தகராறுகளை தீர்க்க நடுவர் தீர்ப்பிற்கு விடும் நடைமுறை.

**20. கூட்டாளிகளின் வகைகளை விவரி (ஏதேனும்3)**
**1. உழைக்கும் கூட்டாளி** - முதலீடு செய்து தொழிலை நிர்வகிக்கும் பொறுப்பேற்றுள்ள கூட்டாளிக்கு உழைக்கும் கூட்டாளி அல்லது பணிபுரியும் கூட்டாளி அல்லது மேலாண்மை கூட்டாளி, அல்லது பொதுக்கூட்டாளி என்று பெயர். இவருடைய பொறுப்பு வரையறாப் பொறுப்பாகும்.
**2. உறங்கும் கூட்டாளி அல்லது உழையா கூட்டாளி** - இவ்வகைக் கூட்டாளிகள் தொழிலில் முதலிடுவர். ஆனால் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை. இவ்வகை கூட்டாளிகள் உறங்கும் கூட்டாளிகள் அல்லது உழையா கூட்டாளிகள்

அல்லது முதலிடும் கூட்டாளிகள் என அழைக்கப்படுவர்.3. **பெயரளவு கூட்டாளி அல்லது பாசாங்கு கூட்டாளி** இக்கூட்டாளி தொழிலில் முதலிடுவதுமில்லை, நிர்வாகத்தில் பங்கேற்பதுமில்லை. இவர் கூட்டாளியாக தன் பெயரை பயன்படுத்த அனுமதித்து, அதன் மூலம் கூட்டாண்மையின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள உதவுகிறார். இவருக்கு இலாபத்தில் பங்கு இல்லை. வியாபாரக் கடன்களுக்கு வெளியாரைப் பொறுத்தவரை இவரும் பொறுப்பாகிறார்.
**4. இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி:** இக்கூட்டாளி இலாபத்தை மட்டும் பகிர்ந்து கொள்வார். நட்டத்தைப் பகிர்ந்து கொள்ள மாட்டார். இவர் நிர்வாகத்தில் பங்கு பெற முடியாது. ஆனால் மூன்றாம் நபருக்கு இவருடைய பொறுப்பு வரையறாப் பொறுப்பாகும்.
**5. முரண் தடைக் கூட்டாளி:** ஒரு தொழிலில் ஒருவர் உண்மையிலேயே கூட்டாளியாக இல்லாமலிருந்து, தன் நடத்தையின் மூலம் தானும் அத்தொழிலில் ஒரு கூட்டாளி என்று வெளியாரை நம்ப செய்த பின் தான் கூட்டாளி அல்ல என்று பின்னர் அவர் மறுத்துக்கூறமுடியாது. அவ்வாறு நம்பி நிறுவனத்திற்கு முன் பணம் அளிப்பவருக்கோ அல்லது நிறுவனத்தோடு ஒப்பந்தத்தில் ஈடுபடுவருக்கோ அவர் பொறுப்பாகிறார். அத்தகைய நபரே முரண்தடைக் கூட்டாளி என்றழைக்கப்படுகிறார்.
6. **உரிமைப் போலிக் கூட்டாளி**: கூட்டாண்மையில் கூட்டாளி அல்லாத ஒருவர் கூட்டாளியென விவரிக்கப்படும்போது தான் அவ்வாறு கூட்டாளி அல்ல என அவர் மறுத்துரைக்க வேண்டும். அவர் ஏதும் சொல்லாது அமைதி காத்திட்டால் அவரைக் கூட்டாளியென நம்பி அக் கூட்டாண்மையுடன் வணிகம் செய்யும் நபர்களுக்கு அவர் பொறுப்பாகிறார். அத்தகைய நபரே உரிமைப் போலிக் கூட்டாளி எனப்படுகிறார்.
**7. துணைக் கூட்டாளி**: ஒரு கூட்டாளிக்கு கிடைக்கும் லாபத்தை இன்னொரு நபர் பங்கிட்டுக் கொண்டால் அந்நபர் துணைக்கூட்டாளி என்று அழைக்கப்படுகிறார். அத்துணைக்கூட்டாளிக்கு நிறுவனத்தில் எவ்வித உரிமையுமில்லை. நிறுவனக் கடன்களுக்கு இவர் பொறுப்பேற்பதுமில்லை **8. இளவர் கூட்டாளி:** 18 வயதை பூர்த்தி செய்யாத நபரை இளவர் என்கிறோம். சட்டப்படி இளவர் ஒருவர் கூட்டாளியாக முடியாது. ஏனெனில் அவர் ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதி இல்லாதவர். ஆனால் அனைத்துக் கூட்டாளிகளும் ஒப்புக்கொண்டால் கூட்டாண்மையின் பயன்களுக்கு மட்டும் இளவர் கூட்டாளியாக சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 3X5=15**

**21.அ. அமைப்பின் கோட்பாடுகள்: (ஏதேனும் 5)**

**I. நோக்கங்களின் ஒருமை:** 1.நோக்கம் என்பது, இலக்கினை அடையக் கூடியதாக இருக்க வேண்டும்.2. குறிக்கோள்களைத் தெளிவாக முடிவு செய்ய வேண்டும். 3. ஒவ்வொரு நடவடிக்கையும் குறிக்கோள்களை நிறைவேற்றக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். **II. வேலைப்பகிர்வு:** 1.தொழிலமைப்பின் மொத்த பணிச் சுமையையும் பகிர்வு செய்ய வேண்டும். 2. இது துறைப்படுத்துதல் என அழைக்கப்படுகிறது. 3. அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிடுதல் வேண்டும். 4. ஓர் அமைப்பின் மொத்த பணிச் சுமையை இதன் மூலம் உணர முடியும்.
**III. கட்டுப்பாட்டு வீச்செல்லை** 1.ஒரு அதிகாரி எத்தனை கீடிநப்பணியாளர்களை சீரிய முறையில் நிர்வகிக்க முடியும் என்பதை இது குறிக்கும். 2.ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் நியாயமான எண்ணிக்கையிலுள்ள கீழ்ப்பணியாளர்களை மேற்பார்வை செய்ய வேண்டும். **IV. தரவரிசைக் கோட்பாடு** 1. ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வரவேண்டும். 2. இதற்குக் "கட்டளைஇணைப்பு" என்று பெயர்.3. ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளருக்கு ஆணையுரிமை வழங்குகிறார். 4. அலுவலர் ஒப்படைக்கும் பணியை திறமையாகச் செய்து முடிக்கும் பொறுப்பைப் பணியாளர் ஏற்கிறார். **V. கட்டளையொருமை:** 1. ஒரு பணியாளர் இரண்டு உயர் அதிகாரிகளின் கீழ் பணியாற்றுவது கடினம். 2. பணியாளர் தனது மேல் அதிகாரிக்கு பொறுப்பாவார். 3. இரண்டு உயரதிகாரிகளின் கீழ் பணியாற்றுவது தவிர்க்கப்படுதல் வேண்டும். அப்படியிருந்தால் குழப்பமும் ஒழுங்கின்மையும் ஏற்பட வாய்ப்பு அதிகம். **VI. பணிவழி வரைவிலக்கணம்:** 1. ஒரு பணியாளரின் ஆணையுரிமையும், பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம். 2. ஒவ்வொரு பணிகளுக்கிடையேயுள்ள தொடர்புகளை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். **VII. ஒருமுனை இயக்கம்:** 1.ஒவ்வொரு குழு நடவடிக்கைகளின் தொகுதியின் நோக்கங்கள் வெற்றியடைய 2. ஒரு தலைமையும் ஒரு திட்டமிடுதலும் இருக்க வேண்டும். 3.அமைப்பின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் பணிகளை நிறைவேற்றவும் இது அவசியமாகிறது. **VIII. ஒருங்கிணைத்தல்:** 1. ஒரு அமைப்பின் விரும்பத்தக்க இலக்குகளை அடைய, அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும். 2. ஒரு துறைவாரி பண்டகசாலையிலுள்ள ஒவ்வொரு துறையின் பணிகளும் மற்ற துறைகளின் பணிகளுடன் அடிக்கடி கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். 3. ஒரு பண்டகசாலை இலாபம் பெற வேண்டுமெனில் அதன் கொள்முதல் துறையும் விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். **IX. அதிகார ஒப்படைவ**: 1. ஒப்படைவு என்பது பணிகளின் ஒரு பகுதியை அல்லது சில கடமைகளை கீழ் பணியாளர்களுக்கு ஒப்படைப்பதாகும். 2. ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளருக்குச் சில பணிகளை ஒப்படைக்கிறார்.

அதை நிறைவேற்ற அவருக்குத் தேவையான அதிகாரங்களையும், உரிமையையும் வழங்க வேண்டும். 3. கீழ்பணியாளர் தனது மேலதிகாரிக்கு பொறுப்பாகிறார்.4.ஒப்படைவு என்பது கீழ்பணியாளர் கடமைப்பட்டிருத்தலை உருவாக்குவதாகும். **X. பொறுப்புக் கோட்பாடு**: 1. ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்குப் பொறுப்பாகிறார். அவர் தனது கடமையிலிருந்து முற்றிலும் தப்பிக்க இயலாது. 2. அலுவலர் தனது மேலதிகாரிகளுக்குப் பொறுப்பாகிறார். **XI. நெகிழ்வுத் தன்மை:** 1. ஒரு அமைப்பு மாற்றியமைக்கக் கூடிய வகையில் நெகிழ்வுத் தன்மையுடன் இருக்க வேண்டும். 2. மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப அமைப்பும் மாறக்கூடிய வகையில் இருக்க வேண்டும். 3. சீர்குலைவு ஏதுமின்றி விரிவுபடுத்தக் கூடிய வகையில் அது இருக்கவேண்டும். **XII. திறமை:** 1. எந்த நிறுவனத்திற்கும் "திறமையே" மந்திரச் சொல்லாக இருக்கவேண்டும். 2.திறமையான முறையில் குறிக்கோள்களை அடையச்செய்யவும், குறைந்த செலவில் பணிகளை நிறைவேற்றும் வகையில் ஓர் அமைப்பின் வடிவமைப்பு இருக்க வேண்டும். **XIII. தனித்திறமை:** 1. ஓர் அமைப்பை உருவாக்குவதில் தனிநபர் திறமை தொடர்புற்று இருப்பதால் பணியாளர்கள் தேர்வு, இட அமர்வு, பயிற்சி அவசியமாகிறது. 2. எனவே அமைப்பு என்பது மனிதவள மேம்பாட்டினை உத்தம அளவில் பயன்படுத்தி வளர்ச்சித் திட்டங்களை ஊக்கமடையச் செய்ய வேண்டும். **XIV. எளிமை:** 1. அமைப்பு முறையின் மற்றொரு கோட்பாடானது அது எளிமையானதாக இருக்கவேண்டும். 2. அதிகாரப் படிநிலை மட்டங்கள் அல்லது ஆணையுரிமைப் படிநிலை மட்டங்கள் மிகுந்திருப்பின், செய்தித் தொடர்புகள் சிக்கலாகும். இதனால் குழப்பமும், மோதலும் ஏற்பட்டு, ஒருங்கிணைப்பு ஏற்படாமல் போகும்.

**21.ஆ. சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கு:** 1.நுகர்வோர் மன்னர்களாக மதிக்கப்படுகிறார்கள். 2.வியாபாரிகள் நுகர்வோரின் தேவைகள் விருப்பங்கள் எதிர்பார்புகள் ஆகியவற்றை பூர்த்தி செய்கின்றனர்.3. அன்றாடம் தேவைப்படும் உணவு வகைகள், துணிவகைகள், எழுதுபொருட்கள், மருந்து பொருட்கள், முதலியன தனி வணிகர் மூலம் நுகர்வோருக்கு அவர்கள் வாழும் இடத்திற்கு அருகாமையிலேயே கிடைக்கிறது. சமுதாயத்தின் தேவைகளை பூர்த்திசெய்வதோடு கீழ்காணும் வகையில் பணியாற்றுகிறது. **1.வேலையில்லா பிரச்சனைக்கு தீர்வு:** குறைந்த கல்வியறிவு உடையவர்களுக்கும், கல்வியறிவு அற்றவர்களுக்கும் அவரவர் இடங்களிலேயே வேலையளித்து ஓரளவு வேலையில்லா பிரச்சனையை தீர்க்கிறது. **2. முதலீட்டுக்கான வாய்ப்பு** சிறு முதலீட்டாளர்கள் குறைந்த முதலுடன் தொழில் தொடங்க வாய்பளிக்கிறது. முதலீட்டாளர்களின் சேமிப்புகளை உற்பத்திக்கு பயன்படுத்த உதவுகிறது. **3.குறைந்த விலையில் பொருட்களை அளித்தல்:** நிர்வாக செலவு குறைவு என்பதால் பொருட்களின் மீதான அதிகபட்ச விலையைவிட குறைவாகவே விற்பனை செய்வர்.**4.சிறு உற்பத்தியாளர்களுக்கு உதவுதல்:** உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் உள்ளூர் சிறு உற்பத்தியாளர்கள் பயன் பெறுகின்றனர்.**5.தரமான பெருட்களை அளித்தல்:** 1. தன் வியாபார நன்மதிப்பை காக்க உயர்ந்த தரமான பொருட்களையே விற்பனை செய்கிறார். 2. விற்ற பொருட்களில் குறையிருப்பின் அதை திரும்ப பெற்று வேறு நல்ல பொருளை திரும்ப தருகிறார். 3. நுகர்வோர் நலனில் அக்கறை கொள்கிறார்.**6.தர்ம சிந்தனையுள்ள நடவடிக்கைகள்:** தனி வணிகர்கள் தனியாகவோ குழுக்களாகவோ அமைத்து இலவச கண் சிக்சை முகாம், மருத்துவ முகாம், பூங்காக்களை பராமரித்தல், ஏழை மாணவர்களுக்கு இலவச சீருடை நோட்டு புத்தகங்கள், பள்ளிகளுக்கு அறைகலன்கள் வழங்குதல் போன்ற பல சமுதாய பணிகளை மேற்கொள்கிறார்கள்.**7.வருமானம் மற்றும் வளங்களை சமமாக பகிர்ந்து அளித்தல்:** பலர் வியாபார உலகில் தனிவணிகராக ஈடுபட வாய்பளித்தால் வருமானம் மற்றும் வளங்களை சமமாக பகிர்ந்தளிக்க உதவுகிறது.**8.நுகர்வோருக்கு உதவுதல்:** நுகர்வோர் வீட்டு வாசலிலேயே பொருட்களை கிடைக்க செய்வதால், நுகர்வோரின் நேரமும், உழைப்பும் மிச்சமாகிறது.

**22.அ.தனியாள் வணிகர் குணாதிசயம் (ஏதேனும் 5)** **I. தனிநபர் உரிமையும் கட்டுப்பாடும்:** 1.ஒருவரே உரிமையாளர் அவரே தொழிலை மேற்கொள்கிறார். 2. யாருடைய குறுக்கீடின்றி சுதந்திரமாக தொழிலை கட்டுப்படுத்துகிறார். **II. மூலதனம்:** 1.ஒருவரே முதலிடுகிறார் தேவைப்படின் உறவினர், நண்பர்களிடம், நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்று முதலீடு செய்கிறார். 2.பெரும்பாலும் முதல் சிற்றளவாகவே இருக்கும்.**III.வரையறாப்பொறுப்பு**: 1. தொழில் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிட்டால், தனது சொந்த சொத்துக்களிலிருந்து அக்கடன்களை தீர்க்க வேண்டும். 2. அதாவது கடனீந்தோர் உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு.**IV.இலாப நட்டம்**: 1. முழு இலாபமும் தனி நபருக்கே பிறருடன் பங்கிட்டுக்கொள்ளத் தேவையில்லை. 2. நட்டமும் அவ்வாறே **V. பதிவு:** 1. பதிவு செய்ய இயலாது. 2. எவரும் எந்த சட்ட சடங்குமின்றி தொடங்கலாம். **VI. தனிச்சட்டம் இல்லை:** கூட்டாண்மை, கூட்டு பங்கு நிறுமம், கூட்டுறவு சங்கம் போன்ற அமைப்புகளை ஒழுங்குபடுத்த சட்டம் இருப்பது போல தனி வணிகத்திற்கு சட்டம் ஏதுமில்லை **VII. சட்டத் தனித்துவமின்மை:** 1. உரிமையாளரும் வணிகமும் ஒன்றாகவே கருதப்படுகின்றது. 2.கூட்டு பங்கு நிறுமத்தைப் போல உரிமையும் நிர்வாகமும் பிரிக்கப்படவில்லை. **VIII. வாழ்வு**: 1.உரிமையாளர் வாழ்வை பாதிக்கும் எதுவும் தொழிலை பாதிக்கும். **2.** அவருடைய இறப்பு, திறன் இழப்பு, வாரிசு இன்மை தொழிலை முடிவுக்கு கொண்டு வரும். **IX. எளிமை:** 1. தொடங்குதல், நடத்துதல், கலைத்தல் எளிது. **2.**தொடங்க, கலைக்க சட்ட விதிகள் ஏதுமில்லை. **X.. உள்ளூர் வியாபாரம்**: குறிப்பிட்ட தெரு வட்டாரம் அல்லது கிராம அளவில்

நடைபெறும். **XI.. சுய வேலை வாய்ப்பு:** 1. தானே தொழில் நடத்துவது, குடும்ப உறுப்பினர்களை தொழிலில் ஈடுபடுத்துவது சுய வேலைவாய்ப்பை உருவாக்குகிறது. 2. சில வெளியாட்களை வேலைக்கு அமர்த்தி வேலை வாய்ப்பை உருவாக்குகிறார். **XII. குறைந்த முதல்:** 1.மிகவும் குறைந்த முதலே போதுமானது. **2.** பிற அமைப்புகளுக்கு (கூட்டாண்மை, கூட்டு பங்கு நிறுமம்) அதிக முதல் தேவை.

**22.ஆ. நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகள் (ஏதேனும் 5) 1. கூட்டாளிகளின் உடன்பாட்டால் (பிரிவு 40)** - ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது, கலைக்கப்படுகிறது. அனைத்துக் கூட்டாளிகளின் சம்மதத்தின் பேரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பட்டால் கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம். **2 கட்டாயக் கலைப்பு (பிரிவு 41)** - அனைத்துக்கூட்டாளிகளின் நொடிப்பு நிலையாலோ அல்லது ஒருவர் தவிர மற்ற எல்லாக் கூட்டாளிகளின் நொடிப்பு நிலையாலோ கூட்டாண்மை நிறுவனம் கட்டாயமாக கலைக்கப்படும். மேலும் செய்துவரும் தொழில் சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கப்படும். ***எடுத்துக்காட்டாக***, மதுவிலக்குச் சட்டம் இயற்றப்படுதல், மற்றொரு நாட்டுடன் போர் ஏற்படுதல். **3. சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு (பிரிவு 42)** - கீழ்க்காணும் நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் நிறுவனம் கலைக்கப்படலாம். அ. ஒரு கூட்டாளி இறந்துவிடின். ஆ. குறிப்பிட்ட காலத்திற்கான கூட்டாண்மையாயின் அக்காலம் முடிவடைந்தவுடன் இ. சில குறிப்பிட்ட தொழில்களைச் செய்ய மட்டுமே தொடங்கப்பட்டிருப்பின், அத்தொழில்கள் நிறைவு பெற்றவுடன். ஈ. ஒரு கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்து விட்டதாக நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பின் கூட்டாண்மை கலைக்கப்படும். **4. விருப்ப முறிக் கூட்டாண்மை அறிவிக்கையால் கலைப்பு (பிரிவு 43)** - விருப்பமுறிக் கூட்டாண்மையில் கூட்டாளி எவரேனும் நிறுவனத்தைக் கலைக்கும்படி பிற கூட்டாளிகளுக்கு எழுத்து மூலம் கோரிக்கைவிடுத்தால் நிறுவனம் கலைக்கப்பட வேண்டும்.

**23.அ. பல்வகை வணிக அமைப்பு: தனி வணிக அமைப்பு:** 1. தொழிலமைப்பின் மிக பழமையான வடிவம். 2. தனது நண்பர்களிடமும், உறவினர்களிடமும், பிறரிடமும் கடனாக பெற்று முதலீடு செய்யலாம். 3. எல்லாம் அவரை அவரே எல்லாமும் என்ற கோட்பாட்டின்படி நடைபெறுகிறது. 4. தொடங்குவது கலைப்பது எளிது. சட்ட சடங்குகள் எதுமில்லை. **இந்து கூட்டுக் குடும்பம்:** 1. இந்தியாவில் தலைசிறந்து விளங்குகிறது. 2. ஒரே இடத்தில் வசித்து வழிபாடு நடத்தி ஒரே வகையான உணவு வகைகளை உண்டு ஒரு குடும்பத்தில் உள்ள சொத்தில் பங்கேற்பவர்கள். 3. உறுப்பினர்கள் தந்தை தாய் மகன் மகள் மகனின் மகன் மகனின் மகள் 4. சொத்துக்கள் பிரிவினை செய்யப்படாத கூட்டுச் சொத்துக்கள் ஆகும். 5. இந்து கூட்டுக் குடும்ப வியாபார அமைப்பின் குடும்ப தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர். குடும்ப தலைவர் மூலம் வியாபாரத்தை நடத்துவர். 6. மிட்டக்சாரா சட்டப்படி ஒரு குடும்பத்திலுள்ள ஆண்வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமை உள்ளவர். இச்சட்டம் அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்காளம் தவிர இந்தியாவில் பிறபகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. 7. தாயபாகா சட்டத்தின்படி, சொத்தின் உரிமை மாற்றம் கூட்டு வாரிசுதாரரின் வாரிசுகளுக்கு வாரிசு உரிமையின்படி ஏற்படுவதாகும். இது பிறப்பின் காரணமாக அல்ல. 8. கூட்டு வாரிசுதாரர் அவரது சொத்தின் பங்கை மற்ற கூட்டு வாரிசுதாரரின் சம்மதமின்றி மாற்றித்தர இயலும். **கூட்டாண்மை:** 1. கூட்டாண்மை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களிடையே உறவு முறையை ஏற்படுத்தி தகுந்த ஒப்பந்தங்களின் மூலம் சட்டமுறை வியாபாரத்தை நடத்தி இலாபங்களை ஒப்புக் கொண்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்ளுதல் ஆகும் 2. குறைந்த பட்சம் இரு நபர்கள். அதிக பட்சம் வங்கித்தொழிலுக்கு 10 நபர்கள், பிற தொழில்களுக்கு 20 நபர்கள் வரை இருக்கலாம். 3. சட்டத்திற்கு உட்பட்ட தொழிலை நடத்த வேண்டும். 4. இலாபத்தை ஒப்புக்கொண்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்வர். ஒப்பந்தம் எதுவும் இல்லையெனில் சமமாகப் பகிர்ந்து கொள்வர். 5. ஒவ்வொரு கூட்டாளியும் வியாபார மேலாண்மையில் பங்கு கொள்ள உரிமை உண்டு 6. கூட்டாண்மையில் பங்கு கொண்ட நபர்களுக்கு கூட்டாளிகள் என்று அழைப்பர். 7. கூட்டாளிகளின் அமைப்புக்கு நிறுவனம் என்று பெயர். **கூட்டுப் பங்கு நிறுமம்:** 1. நிறுமம் என்பது பல நபர்களின் சங்கமமாகும். 2. இது சட்டத்தால் கூட்டுருவாக்கப்பட்டு தனிநபர் தன்மையும், பொது முத்திரையும் நிலைப்பேற்று தொடர்ச்சியும் பெற்ற அமைப்பாகும். 3. நிறுமம் தன் பெயரிலேயே ஒப்பந்தங்களில் ஈடுபடலாம். 4. பங்குநரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. 5. பங்குகளை எளிதாக மாற்றித்தர இயலும் 6. நிறுமத்தின் மேலாண்மை இயக்குநரவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. **கூட்டுறவு அமைப்பு:** 1. கூட்டுறவு என்பது தாமாகவே அமைத்து கொள்ளும் நபர்களின் சங்கமாகும். 2. பொதுவாக ஒரே பொருளாதார நலனை கருதி உள்ளூரில் ஒரே இடத்தில் வசிப்பவர்கள் ஒன்று சேர்ந்து தன் விருப்பத்தின் பேரில் அமைக்கும் அமைப்பு ஆகும் 3. ஒருநபர் எத்தனை பங்குகள் வைத்திருந்தாலும் ஒரு நபர் ஒரு வாக்கு எள்பது இதன் மிக முக்கிய கோட்பாடாகும். 4. இதில் பொதுவாக ரொக்க அடிப்படையில் மட்டுமே வியாபாரம் நடைபெறும்.

5. கூட்டுறவு அமைப்பு பதிவு செய்தவுடன் கூட்டுருவாக்கம் பெறுகிறது. இவ்வமைப்பு குடியாட்சி அமைப்பின் கோட்பாட்டின்படி நிர்வகிக்கப்படுகிறது. 6. அரசு இதற்கு முத்திரைத்தாள் வரி, பதிவு கட்டணங்கள், வருமான வரி இவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. **பன்னாட்டு நிறுமங்கள்:** 1. பன்னாட்டு நிறுமம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரம் நடத்தி மேலாண்மை செய்து வருவதாகும். 2.**நைல் H. ஜேகோபி** அவர்கள் கூற்றுப்படி, "ஒரு பன்னாட்டு நிறுமம் என்பது ஒரு வியாபாரத்தை தொடங்கி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் மேலாண்மை செலுத்து வருவதாகும்," என்று கூறுகிறார். 3. சிறப்பியல்புகள்: 1. ஒரே நேரத்தில் பல நாடுகளில் நடத்தப்படும் 2.மிகப்பெரிய அளிவில் செயல்படும் 3. பிறநாடுகளில் உள்ள கச்சாப்பொருட்கள், பணியாளர்கள், சந்தையை பயன்படுத்திக் கொண்டு போக்குவரத்துச் செலவுகளை குறைக்க முற்படும். 4. (எ.கா) யூனிலீவர் லிமிடெட் - பிரிட்டிஷ் நிறுமம் பிலிப்ஸ் - டச்சு நிறுமம் யூனியன் கார்பைடு - அமெரிக்கா நிறுமம் இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷின் - அமெரிக்க நிறுமம். கோகோ கோகோ கழகம் - அமெரிக்கா நிறுமம் **துறைமுறை அமைப்பு** 1. இது அரசின் ஒரு பகுதியாக செயல்படுகிறது. அந்தந்த அமைச்சகத்தின் நிர்வாகஅதிகாரிகளால் நிர்வாகம் செய்யப்படுகிறது. 2. இது பொதுத்துறை அமைப்பில் மிகவும் பழைமையானதாகும்.3.(எ.கா)இரயில் போக்குவரத்து, தொலைபேசி, அணுசக்தி அனைத்திந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி. **பொதுக்கூட்டுரு:** 1. பாராளுமன்றத்தில் தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் அமைப்பு. 2.இது சட்டமுறை கழகம் என்றும் அழைக்கப்படும். 3.தனிச்சட்டத்திலேயே இதனுடைய நோக்கம் அதிகாரங்கள், பணிகள் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும் 4. அரசின் நிதியுதவியுடன், சுயாட்சித் தன்மை கொண்டு செயல்படுகிறது. 5. இதன் நோக்கம் பொதுமக்களுக்கு சேவை புரிவதாகும்.6. (எ.கா) 1. இந்திய ரிசர்வு வங்கி, 2. யூனிட்டிரஸ்டு ஆப் இந்தியா, 3. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம். **அரசு நிறுமங்கள்:** 1. இந்திய நிறுமச்சட்டம் 1956-ன் படி உருவாக்கப்படுவது.2. இதன் செலுத்திய பங்கு முதலில் 51% மத்திய அல்லது மாநில அரசுகளோ அல்லது மத்திய மாநில அரசுகளோ சேர்ந்து பெற்றிருத்தல் 3.தனியார் நிறுமத்திலும் அரசு முதலீடு செய்கின்றன. 4.இதன் பணியாளர்கள் அரசு ஊழியர்கள் அல்லர். 5.தனியார் துறை ஏற்க அஞ்சும் தொழில்களில் அரசுநிறுமம் முதலீடு செய்கிறது. 6. நலிவடைந்த தனியார் துறை நிறுவனங்களை ஏற்று நடத்தப்படுகிறது. 7. (எ.கா) அரசு போக்குவரத்துக்கழகம், இந்துஸ்தான் ஸ்டில் லிமிடெட், மாருதி உத்யோக், பெல் **வாரிய அமைப்பு**: 1.தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. 2.இதன் அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவிடம் உள்ளது. 3. (எ.கா) 1. தமிழ்நாடு மின்சார வாரியம், 2.தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், 3. தமிழ்நாடு குடீநீர் மற்றும் வடிகால் வாரியம்

**23.ஆ. கூட்டாண்மையின் சிறப்புக்கூறுகள்.**

**1. உடன்பாடு** - கூட்டாளிகளிடையே ஏற்படும் உடன்பாட்டின் காரணமாக கூட்டாண்மை ஏற்படுத்தப்படுகிறது. உடன்பாடு எழுத்து வடிவிலோ அல்லது பேச்சு வடிவிலோ இருக்கலாம். எழுத்து வடிவத்தில் உள்ள உடன்பாடு, பிற்காலத்தில் கூட்டாளிகளுக்கிடையே எழும் கருத்து வேறுபாடுகளை தவிர்க்க உதவும். **2. பல நபர்கள்** - கூட்டாண்மை என்பது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்களிடையே நிகழும் உறவுமுறையாகும். கூட்டாண்மையின் குறைந்தபட்ச நபர்களின் எண்ணிக்கை இரண்டு. கூட்டாண்மையின் அதிகபட்ச நபர்களின் எண்ணிக்கை, வங்கித் தொழிலாயின் பத்தும், பிற தொழிலாயின் இருபதும் ஆகும். **3.ஒப்பந்த உறவு** - கூட்டாளிகளிடையே ஏற்படும் ஒப்பந்தத்தின் காரணமாகவே கூட்டாண்மை ஏற்படுத்தப்படுகிறது. இயற்கை உறவு, பரஸ்பர அன்பு மற்றும் பிரியம் காரணமாக கூட்டாண்மை உருவாகுவதில்லை. உடன்பாடு கொள்ள சட்டப்படி தகுதி உடையவர்கள் மட்டுமே கூட்டாளிகளாக இருக்க முடியும். பித்தர், நொடிப்பு நிலையர் போன்றோர் கூட்டாளியாக முடியாது. **4.சட்டத்திற்குட்பட்ட தொழில்**-தொழில் என்பது எந்த ஒரு வியாபாரத்தையும்,பணியையும்,அலுவலையும் குறிக்கும் *எடுத்துக்காட்டாக*, ஜெனரல் ஸ்டோர்ஸ், தணிக்கையாளர்களின் கூட்டாண்மை, வழக்குரைஞர்களின் கூட்டாண்மை முதலியன. எத் தொழிலானாலும், அத்தொழில் நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். கள்ளக்கடத்தல் செய்ய உருவாகும் கூட்டாண்மை சட்டத்திற்கு புறம்பானதாகும். அத்தொழிலில் ஈடுபடும் கூட்டாளிகளின் உறவு கூட்டாண்மையாக ஏற்றுக்கொள்ள முடியாது. **5. இலாபப்பங்கு** - கூட்டாண்மை வணிகத்தின் இலாபம் அல்லது நட்டத்தை உடன்பாட்டில் உள்ள விகிதாசாரப்படி கூட்டாளிகள் பிரித்துக் கொள்கிறார்கள். பொதுவாக கூட்டாளிகள் தாங்கள் செலுத்திய முதலின் அடிப்படையில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொள்ளலாம். ஆனால் எந்த விகிதமும் உடன்பாட்டில் இல்லையென்றால் இலாப நட்டத்தை சமமாக பங்கிட்டுக்கொள்கிறார்கள். **6. முகமை உறவு** - கூட்டாண்மையின் கூட்டாளிகளுக்கிடையே முகவர் மற்றும் முதல்வர் என்ற உறவு உள்ளது. ஒவ்வொரு கூட்டாளியும் உரிமையாளராகவும், அதே சமயத்தில் முகவராகவும் செயல்படுகிறார்கள். அனைத்துக் கூட்டாளிகளும் இணைந்தோ அல்லது அனைத்துக் கூட்டாளிகளுக்கும் பதிலாக யாராவது ஒருவரோ, தொழிலை நடத்தலாம். **7. வரையறாப் பொறுப்பு** - கூட்டாண்மையில் ஒவ்வொரு கூட்டாளியும் தொழிலின் கடன்களுக்கு வரையறாப்

பொறுப்புடையவராகிறார். கூட்டாண்மையின் கடன்கள் முழுவதையும் திருப்பிச் செலுத்த கூட்டாண்மையின் சொத்துக்கள் போதுமானவையாக இல்லாவிட்டால், கூட்டாளிகள் தங்கள் சொந்த சொத்துக்களிலிருந்து கூட்டாண்மையின் கடன்களை அடைக்க வேண்டும். **8. கூட்டு மற்றும் தனிப் பொறுப்பு** - கடனீந்தோர் தங்களுக்கு சேரவேண்டிய மொத்த கடன் தொகையையும் அனைத்துக் கூட்டாளிகளின் தனிச் சொத்துக்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இது கூட்டாளிகளின் கூட்டுப்பொறுப்பாகும். (அல்லது) கடனீந்தோர் தங்களுக்குச் சேரவேண்டிய கடன் தொகையை ஏதேனும் ஒரு கூட்டாளியின் தனிச்சொத்துக்கள் மீது வழக்குத் தொடுத்து பெற்றுக் கொள்ளலாம். இது கூட்டாளியின் தனிப் பொறுப்பாகும். **9. தனியாள் தன்மையின்மை** - கூட்டாண்மை நிறுவனம் மற்றும் கூட்டாளிகள் இரண்டும் ஒன்றே. கூட்டாளிகள் இல்லாமல் கூட்டாண்மையில்லை. கூட்டாளிகளின் உரிமையும் கடமையுமே நிறுவனத்தின் உரிமையும் கடமையும் ஆகும். மேலாண்மையும், கட்டுப்பாடும் கூட்டாளிகளிடம் உள்ளது. அவர்களே உரிமையாளரும் கூட. **10. உட்கிடை ஆணையுரிமை** - கூட்டாண்மையில், ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மை நிறுவனத்தின் முகவர்களாக கருதப்படுகிறார்கள். வியாபார நடவடிக்கைகளில் ஒரு கூட்டாளி நல்லெணத்துடனும் நிறுவனத்திற்காகவும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கூட்டாண்மையையும் மற்ற கூட்டாளிகளையும் கட்டுப்படுத்தும் உட்கிடை ஆணையுரிமை. 11. **பூரண நல்லெண்ணம்** - கூட்டாளிகளிடையே நிலவும் நல்லெண்ணம், மற்றும் பரஸ்பர நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் கூட்டாண்மை ஏற்படுகிறது. எனவே ஒவ்வொரு கூட்டாளியும் மிகுந்த நேர்மையாகவும், பிற கூட்டாளிகளிடம் உண்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும். உண்மையான கணக்கு மற்றும் தொழில் நடவடிக்கைகளின் விவரமனைத்தையும் கூட்டாளிகள் அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும். எந்தக் கூட்டாளியும் இரகசியமாக இலாபம் ஈட்டக்கூடாது. 12. **பங்கு மூலதன உரிமையை மாற்ற இயலாமை** - எக்கூட்டாளியும் பிற கூட்டாளிகள் அனைவரின் வெளிப்படையான ஒப்புதல் பெறாமல் தொழிலில் தனக்குள்ள உரிமையைப் பிறருக்கு மாற்றித் தரவோ, விற்கவோ முடியாது. ஏனெனில் ஒரு கூட்டாளி, தானே முகவராகவும் இருந்து கொண்டு, தன்னுடைய உரிமைகளை தன்னிச்சையாக மற்றவர்களுக்கு மாற்றித்தர இயலாது. 13. **பதிவு** - கூட்டாண்மைப் பதிவு இந்தியாவில் கட்டாயமில்லை. அது கூட்டாளிகளின் விருப்பத்திற்க்குட்பட்டது. அவர்கள் விரும்பினால் எப்போது வேண்டுமானாலும் பதிவு செய்து கொள்ளலாம்.